(அ) மற்றும் (ஆ): இப்பால வேலைக்கான பணிகள் பிப்ரவரி 1992–ல் துவக்கப்பட்டு நல்ல முன்னேற்றத்தில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈக்காட்டுத் தாங்கல் நேரு சாலையிலுள்ள பாலத்தில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை போன்று வேலை துவங்கப்பட்டுள்ளது. நான் சட்டமன்ற உறுப்பினரான உடன் என்னுடைய கோரிக்கையை தமிழக அரசு ஏற்று - குறிப்பாக தமிழகத்தினுடைய முதலமைச்சர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பொதுப்பணித் துறையை சார்ந்த அமைச்சருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பாலம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு? எவ்வளவு காலத்தில் முடிப்பதற்கான நிர்பந்தம் உள்ளது ? எப்போது பணி முடியும் ? பொதுமக்கள் உபயோகத்திற்கு எப்போது திறந்துவிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பாலத்தினுடைய திட்ட மதிப்பீடு 2 கோடியே 70 லட்சம் ரூபாய். இந்தப் பணி 3–2–1992ல் துவக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை முடிப்பதற்கான காலக்கெடு 2–8–1993 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பணி குறித்த காலத்தில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 529 டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

529—

நீப்பத்துறை - ராவந்தவாடி ஓடையின் குறுக்கே பாலம் அமைத்தல்.

* 12097—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, நீப்பத்துறைக்கும் ராவந்தவாடிக்கும் இடையே உள்ள ஓடையினால் போக்குவரத்து பாதிப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஓடையின் குறுக்கே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்போதைக்கு திட்டம் ஏதுமில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீப்பத்துறை கிராமத்திற்கும், ராவந்த வாடி கிராமத்திற்கும் மத்தியில் இந்த ஓடை இருக்கிறது. இதற்கு கல்லுக்கட்டு பள்ளம் என்றே பெயர். சாலையை இரு துண்டு களாக பிரிக்கிறது. மழைக்காலங்களில் காட்டாற்று வெள்ளம் அதில் வருவதால் மக்கள் கூட அந்த வழியாக செல்ல முடியாது போக்குவரத்துப் பேருந்துகள் அறவே செல்ல முடியாது. உணவு அமைச்சர் அவர்கள் செங்கம் வந்து மக்கள் நலப் பணிகளை துவங்கியபோது அவருடைய காரும் கூட அந்த இடத்திலே மாட்டிக் கொண்டது. அப்போது நான் பொதுப்பணித்துறை அமைச்சரிடம் பரிந்துரை செய்கிறேன் என்று அவரே சொன்னார். எனவே அமைச்சர் அவர்கள் இதை கனிவன்புடன் பரிசிலிப்பாரா எனகேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் இந்த கல்லுக்கட்டு பள்ளம் என்ற ஓடையிலே நீர் வருகின்ற காலங்களில் ஒரு 3,4 நாட்களுக்கு போக்குவரத்து பாதிக்கப்படுகிறது என்பது அரசி னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு 20 லட்சம் ரூபாய் மதிப்பீடு என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஆண்டும் எல்லா பாலங்களையும் கட்டிவிட முடியாது என்ற சூழ்நிலையில் தான் நான் திட்டம் ஏதும் இல்லையென சொன்னேன். இருந்தாலும் அந்தச் சாலையினுடைய போக்குவரத்துப் பிரச்சினையை கருதி இதுபோன்ற பாலங்கள் கட்டுகின்ற பிரச்சினைகளில் நிதி ஆதாரத்திற்கு உட்பட்டு பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிமித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 530, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

530—

ஒரத்தூர் பெரிய வாய்க்கால் கரையில் வண்டிப்பாதை அமைத்தல்.

*10621 திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் பெரிய வாய்க் கால் கரையில் வடக்குத் தெரு பாலத்தில் இருந்து செருகுடி வரையிலும் (1 கி.மீ. தூரம்) வண்டிப்பாதை அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?